சென்னை கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் இளைஞரணி சார்பில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மாநில வர்த்தக அணி செயலாளர் காசி முத்துமாணிக்கம், மேயர் பிரியா ராஜன், ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ. பி.கே.மூர்த்தி டி.எஸ்.பி. ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ் மோகன், பால முருகன், நெப்போலியன் பங்கேற்றனர்.

4 நாட்களுக்கு கனமழை!

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசு அறிவுறுத்தல்!

சென்னை, டிச. 10 -

சென்னை, தென்மேற்கு வங்கக்கடலில் உருவான ஃபெஞ்சல் புயல் காரணமாகத் தமிழகத்தின் வட மாவட்டங்களில் தொடர்ந்து கனமழை பெய்தது. இதனால் விழுப்புரம், கடலூர், கள்ளக்குறிச்சி, தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை உள்ளிட்ட மாவட்டங்களின் பல்வேறு இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இந்த சூழலில் தென்கிழக்கு வங்கக் கடல் மற்றும் பூமத்திய ரேகையை ஒட்டிய இந்திய பெருங்கடல் பகுதியில், காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இது நேற்று முன்தினம் வலுவடையும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த அமைப்பு வலுவடையாமல், அதே பகுதியில் நிலை கொண்டுள்ளது.

அடுத்த 24 மணி நேரத்தில் இது மேலும் வலுவடைந்து மேற்கு, வடமேற்கு திசையில் தமிழகம் மற்றும் இலங்கை கடலோர பகுதிகளை நோக்கி நகரலாம். இதன் காரணமாக, இன்று முதல் வருகிற 13ந் தேதி வரை 4 நாட்களுக்கு தமிழ்நாட்டில் டெல்டா மற்றும் வட மாவட்டங்களில் சில இடங்களில் கனமழைக்கும், ஓரிரு இடங்களில் மிக கனமழை வரைக்கும் பெய்ய வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில் மிக கனமழை எச்சரிக்கை எதிரொலியாக முன்னெச்சரிக்கை பணிகளை மேற்கொள்ளவும், பேரிடர்களை எதிர்கொள்ளவும் அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையருக்கு பேரிடர் மேலாண்மைத் துறை அறிவுறுத்தி உள்ளது.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கை யில், "நிலையான வழிகாட்டு விதிமுறைகளின்படி பேரிடர்களை எதிர்கொள்ள அனைத்துத் துறைகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும்" என்றும், "எதிர்பாராத நிகழ்வுகள் நடைபெற்றால் உடனடியாக பேரிடர் மேலாண்மை துறைக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்" என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சரும் திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகர் செயலாளர் ஆவடி சாமு.நாசர் முன்னிலையில் திருவள்ளூர் தெற்கு மாவட்டத்தை சேர்ந்த நாம் தமிழர் கட்சி மாவட்ட தலைவர் ஆ.சபரிஷ், பூவிருந்தவல்லி தொகுதி பொருளாளர் சதீஷ் ஒன்றிய பொருளாளர் பரிச முத்து , பூவிருந்தவல்லி தொகுதி செயலாளர் கௌதம் தொகுதி தலைவர் தமிழரசன் தொகுதி செய்தி செயலாளர் வெங்கடேசன் மற்றும் நிர்வாகிகள் 200 க்கும் மேற்பட்டோர் அக்கட்சியில் இருந்து விலகி திருவள்ளூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் சே.பிரேம்ஆனந்த் ஏற்பாட்டில் கழகத்தில் இணைத்துக் கொண்டனர். உடன் ஒன்றிய நிர்வாகிகள் இ.என்.சேகர், ஆர்.திலீப்ராஜ், மகேஷ்வரிபால விநாயகம், தாஸ், முரளி, உதயா உள்பட பலர் உள்ளனர்.

தமிழ்நாட்டில் – அதிக

கேலோ இந்தியா மையங்கள் திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி

புதுடெல்லி, டிச. 10 -

தமிழ்நாட்டில் அதிக 'கேலோ' இந்தியா மையங்கள் (KIC) திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா என நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி எழுப்பினார்.

அதன் விபரம் வருமாறு :-

கேள்விகள்: அ. தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுவதும் மாநிலம் மற்றும் மாவட்டம் வாரியாக கேலோ இந்தியா மையங்களில்(KIC)பயிற்சிபெற்றுள்ளவிளையாட்டுவீரர்களின் எண்ணிக்கை மற்றும் மாநில, தேசிய,சர்வதேசஅளவில்இந்த வீரர்கள்செய்தசாதனைகளின் விபரங்கள்.

ஆ. தமிழ்நாடு உள்ளிட்ட நாடு முழுவதும் மாநிலம் மற்றும்மாவட்டவாரியாகசெயல்படும்KICமற்றும்விளையாட்டு கல்விக்கூடங்களின் எண்ணிக்கை

இ. நாடு முழுவதும் குறிப்பாக தமிழ்நாட்டில் அதிக KICக்களை திறக்க ஒன்றிய அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா, ஈ.அப்படியானால்அதன் விபரங்கள்மற்றும்இல்லைஎன்றால் அதற்கான காரணங்கள், உ. இந்த மையங்களில் கடந்த மூன்று ஆண்டுகளில் மற்றும் நடப்பு ஆண்டில் மாநில வாரியாக விளையாட்டுக் கட்டமைப்புகளை நிறுவுதல்/ உருவாக்குதல், இயக்குதல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் விவரங்கள்;மற்றும்ஊ.இத்திட்டத்தின்நோக்கத்தைஅதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டு ள்ளதா, அப்படியானால், அதன் விவரங்கள் என்ன?

ஒன்றியஇளைஞர்விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர். மன்சுக் மாண்டவியா அளித்த பதில்:

அ. தமிழ்நாடு உட்பட கேலோஇந்தியாமையங்களில் (KICs) பயிற்சி பெற்ற மாநிலம்

மற்றும் மாவட்ட வாரியாக விளையாட்டு வீரர்கள் மற்றும் மாநில,தேசியமற்றும்சர்வதேச அளவில் இந்த விளையாட்டு வீரர்கள் சாதனைகள் விவரங்கள் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றன.

https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters

ஆ. தமிழ்நாடு உட்பட, கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் செயல்படும் கேலோ இந்தியா மையங்கள் மற்றும் அங்கீகாரம் பெற்ற அகாடமிகளின் மாநில வாரியான விவரங்கள் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றன. https://dashboard.kheloindia.gov.in/ statewisekheloindiacenters

இ. மற்றும்ஈ. ஆம்,ஐயா.தமிழகம் உட்பட நாடு முழுவதும் 1250 KIC களை திறக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. கேலோ இந்தியா திட்டத்தின் கீழ் இன்றுவரை அறிவிக்கப்பட்ட அனைத்து KICகளின் விவரங்களும் இந்த இணையதளத்தில்கிடைக்கின்றன. https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters

உ. கடந்த மூன்று வருடங்கள்மற்றும்நடப்புஆண்டில்KICகளில்விளையாட்டு உள்கட்டமைப்பை நிறுவுதல்/ உருவாக்குதல், இயக்குதல்மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றிற்காக ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதியின் மாநில வாரியான விவரங்கள் இந்த இணையதளத்தில் கிடைக்கின்றது.

https://dashboard.kheloindia.gov.in/statewisekheloindiacenters

இவ்வாறு ஒன்றிய அரசு பதில் அளித்தது.

முதல்வர் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த மூன்றரை ஆண்டுகளில்

நகராட்சிக்கு தேவையான அளவு நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது!

சட்டப்பேரவையில் உறுப்பினர் கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு பதில்!

சென்னை, டிச. 10 -

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின் போது அறந்தாங்கி உறுப்பினர் தி.ராமச்சந்திரன் கேள்விக்கு அமைச்சர் கே.என்.நேரு பதிலளிக்கையில் முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட இந்தமூன்றரைஆண்டுகளில்எந்த நகராட்சிக்கும்குறைவுஇல்லாமல் ஒவ்வொரு நகராட்சிக்கும் நிதியை ஒதுக்கித் தந்து பணிகள் நடைபெற்று வருகின்றது என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு: -

தி.ராமச்சந்திரன்: அறந்தாங்கி, அவுலியா நகர் 1 ஆம் வீதியில்உள்ளபாலத்தைச்சீரமைக்கவும், கழிவுநீர் கால்வாய் அமைக்கவும் அரசு ஆவன செய்யுமா?

அமைச்சர் கே.என். நேரு: திருத்திய விடையை தருவதற்கு அனுமதி அளிக்குமாறு கேட்டுக்கொண்டு, விடை (அ) மற்றும் (ஆ), அறந்தாங்கி வார்டுஎண்22, அவுலியாநகர் 1 ஆம் வீதியில் பழுதடைந்த பாலம் அகற்றப்பட்டு, புதிய கான்கிரீட் பாலம் மற்றும் 34 மீட்டர் நீளமுள்ள மழைநீர் வடிகால் பணி 2¼ இலட்சம் மதிப்பீட்டில்முடிக்கப்பட்டு, தற்போது பொதுமக்கள் பயன்பாட்டில் உள்ளது.

தி.ராமச்சந்திரன்: ஃபெஞ்சல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விரைந்து சென்று உரிய பாதுகாப்பும், நிவாரணப் பணிகளும் சிறப்பாக மேற்கொண்ட முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும், ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், அரசு அதிகாரிகள், ஊழியர்கள் அனைவருக்கும் என்சார்பிலும், காங்கிரஸ்கட்சியின் சார்பிலும் பாராட்டுகளும், நன்றியையும் முதற்கண் தெரிவித்தக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. எனது அறந்தாங்கி நகராட்சி வார்டு 22, அவுலியா நகர் பகுதி உட்பட அறந்தாங்கி நகராட்சியில் உள்ள27வார்டுகளுக்கும்கூடுதலாக ஒரு சிறப்பு நிதி ஒதுக்கி மழைநீர் வடிகால் (storm water drain) மற்றும் கழிவுநீர் வடிகால் மற்றும் சாலைகளை மேம்படுத்தித்தர அரசுமுன்வருமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

அமைச்சர் கே.என். நேரு: முதல்வர் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்ட இந்த 3½ ஆண்டு காலத்தில் எந்த நகராட்சிக்கும் குறைவு இல்லாமல், ஒவ்வொரு நகராட்சிக்கும் நிதியை ஒதுக்கித்தந்து பணிகள் நடைபெற்று வருகின்றது. நம்முடைய அறந்தாங்கி நகராட்சிக்கு, கடந்த 3½வருடங்களில்அரசின்மூலமாக சாலைப் பணிகளுக்கு ரூபாய் 15 கோடி, வடிகால் பணிகளுக்குரூபாய்43இலட்சம், வாகனங்கள் வாங்குவதற்கு ரூபாய் 90 இலட்சம், தெரு விளக்கு பணிகளுக்கு ரூபாய் 60 இலட்சம், குடிநீர் அபிவிருத்தி பணிகளுக்கு ரூபாய் 31 கோடி, குளங்கள் மேம்பாட்டிற்காக ரூபாய் 5 கோடி, பூங்காக்கள் அமைக்க ரூபாய் 21 இலட்சம், திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ரூபாய் 12 இலட்சம், முதலமைச்சர் அவர்களின் காலை சிற்றுண்டிதிட்டத்திற்குசமையல் கூடம் அமைக்கும் பணிக்கு ரூபாய் 25 இலட்சம், slaughter house பராமரிப்பு பணிக்கு ரூபாய் 10 இலட்சம், பள்ளிக்கட்டடப்பராமரிப்பு பணிக்கு ரூபாய் 69 இலட்சம் மற்றும் ஏனைய இதரப்பணிகளுக்கு ரூபாய் 35 இலட்சம் என ஆக மொத்தம் 66 கோடி ரூபாய் அறந்தாங்கி நகராட்சிக்காக, இந்த 3½ ஆண்டுகளில் செலவு செய்யப்பட்டிருக்கிறது. உறுப்பினர் இன்னும்எந்தப்பணிமுடியாமல் இருக்கிறது என்று சொன்னால்,அதையும்முதலமைச்சர் அவர்களின் அனுமதியைப் பெற்று நிதிநிலைமைக்கேற்ப சீரமைத்துத்தரப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தி.ராமச்சந்திரன்: அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மீண்டும்நன்றி. அறந்தாங்கிதொகுதியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நமது அரசு அறிவித்தும், நகராட்சிக்கு சொந்தமாக போதிய இடம் இல்லாத காரணத்தினால், தஞ்சாவூர்சத்திரத்திற்குசொந்தமான, இப்போது சந்தை நடைபெறுகின்ற இடத்தை, ஏற்கெனவேகேட்டிருந்தேன் அதைஇரண்டாகபிரித்துமுத்தமிழறிஞர்டாக்டர்கலைஞர் அவர்களின் பெயரில் ஏற்கெனவே இயங்கிகொண்டிருக்கும் பேருந்து நிலையத்தை புதிய இடத்திற்கு விரிவுப்படுத்தி, நவீன வசதியுடன்கூடியஒருபேருந்துநிலையமும், மறு பகுதியில் ஒரு சீர் செய்த சந்தையும் விரைந்து அமைத்துத்தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை தங்கள் வாயிலாக கேட்டு, நன்றிக்கூறி விடை பெறுகின்றேன். நன்றி வணக்கம்.

அமைச்சர் கே.என். நேரு: உறுப்பினர் அவர்கள் சொன்னதை நான் கவனமாக கேட்டேன். இப்போது,நிலம்கையகப்படுத்துவது என்று சொன்னால்,அதற்குமிகப்பெரியபொருள்செலவுஏற்படுகிறது. அது பேருந்து நிலையத்திற்கோ அல்லது சந்தைக்கோ கட்டவேண்டிய பொருள்செலவைக்காட்டிலும், நிலம் கையகப்படுத்துவதிலே பெரிய செலவு ஏற்படுகிறது. அதனால்தான் முதலமைச்சர் அவர்கள் நகராட்சியைச்சுற்றிஎந்தெந்தப் பகுதிகள் ஜனத்தொகை அதிகமாக இருக்கின்ற கிராம ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைப்பதற்கான ஒரு குழுவை அமைத்து, அந்தக் குழுபரிசீலித்துவருகிறது. அப்படி இணைக்கின்றபட்சத்தில் அருகில் இருக்கின்ற அந்த இடத்தை தேர்வு செய்து பேருந்துநிலையம், சந்தைகள் போன்ற நகராட்சிக்கு வருவாய் வருகின்ற அந்தப் பணி நிச்சயமாக மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்தக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

வட்டச் செயலாளர் கே.என்.தாமோதரன் தலைமையில் அரிமா சு.சேகர் முன்னிலையில்

வேளச்சேரி 176 அ வட்டத்தில் உதயநிதி உதயநாள் பொதுக்கூட்டம்!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் – கவிச்சுடர் கவிதைப்பித்தன்– மு.காவியா சிறப்புரை

சென்னை, டிச. 10 -

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரிமேற்குப்பகுதி 176 அ வட்டக் கழகம் சார்பில் கழகஇளைஞர்அணிச்செயலாளர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி மனிதநேய உதயநாள் தெருமுனைக் கூட்டம் வேளச்சேரி விஜய நகர் 1-வது மெயின் ரோட்டில் இன்று (10.12.2024) மாலை 6 மணிக்கு வட்டச் செயலாளர் கே.என். தாமோதரன் தலைமையில் நடைபெறுகிறது.

வேளச்சேரி மேற்கு பகுதி செயலாளர் அரிமா சு.சேகர், விளையாட்டு மேம்பாட்டு அணி,மாவட்டஅமைப்பாளர் வேளச்சேரி வே.ஆனந்தம் எம்.சி. ஆகியோர் முன்னிலை வகித்து பேசுகின்றனர். மாவட்டப்பிரதிநிதிஜே.பி.எஸ்.பவளவண்ணன், ஏ.கலைச்செல்வன், ஆர்.கே.குட்டி, எம்.நாகமணி மற்றும் பி.கருணாகரன், சு.சுந்தர்,ஆர்.பழனி,டபிள்யூ.ஹமீத், எஸ்.சுகுமார், ஆர்.செல்வராஜ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், இளம் பேச்சாளர் மு.காவியா ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் தமிழச்சி தங்கப்பாண்டியன் எம்.பி., துணை மேயர்மு.மகேஷ்குமார்,ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ, மண்டலக்குழுத்தலைவர்இரா. துரைராஜ், மாவட்ட நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், த.விஸ்வநாதன்எம்.சி., மனோகரன், வாசுகிபாண்டியன்மற்றும்சாய் ஜெயகாந்தன் பாரதி, வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி.,. எஸ்.பாஸ்கரன், மு.மகேஸ்வரி முருகவேல்எம்.சி.,மற்றும்கழக த.ரமேஷ்,எம்.விநாயகமூர்த்தி, த.ஜெகதீசன், முகேஷ், கண்ணா, நா.மணிகண்டன், சி.பரிமேலழகர்,பகுதிநிர்வாகிகள் சி.பழனி, எம்.ஏ.சங்கர் , பொ. த.எழில்வாணன், சே. மைதிலி, ந.டில்லிகுமார், வட்டச்செயலாளர்கள்பொ.த.மதிவாணன், எஸ்.முருகவேல், த.பார்த்திபன், தே.கோபி, க.பாரதிதாசன்,ஜி.பி.எஸ்.பாலசதிஷ், வி.சக்திவேல், துணை அமைப்பாளர்கள் எம்.எஸ்.விஸ்வா, வி.சண்முகநாதன், பிரபு, போஸ்,ப.பழனி,வி.ராஜசேகர், ம.விக்னேஷ்வரன்,நூர்பாஷா, டி.கருணாகரன், எஸ்.பாலு, நடேஷ்குமார், ஜி.கார்த்தி கேயன், பெயின்டர் ஆறுமுகம், ஏ.ரவி, ஏ.சுரேஷ்,

டி.ராமலிங்கம், செ.சுப்பிரமணி, சு.பொன்னுசாமி, செ.அருள்,டி.ராதாகிருஷ்ணன், வி.ராஜசேகர், செ.முனுசாமி, கே.சிவகுமார், கே.மதன், எம்.சரவணன்,டி.பாலாஜி,எம்.அருணாச்சலம், எல்.சார்லஸ், எம்.தியாகு, கே.ஆறுமுகம், கே.கார்த்திகேயன், கே.அஜித்குமார், கே.மகேஷ், எம்.வெங்கடேஷ், கே.லஷ்மி நாராயணன், டி.அழகர், ஏ.சுரேஷ், கே.அயோத்தி, ஆர்.அரசு, எஸ்.ரவி, ஆர்.சரவணன், எஸ்.சீனிவாசன், பி.சரவணன், டி. முருகன், ஏ.ஆனந்தன், சி.என்.மேகநாதன், ஜே.கே.விஜி, கே.ஜெகதீஷ் ரவி, கே.புவனேஸ்வரன், ஆர்.ஜெகன், ஏ.லூர்துசாமி, எஸ்.சிவா, எம்.அசோக், ஆவின் ராஜா, பி.ராஜா, ஏ.பாலகிருஷ்ணன், துரைபாண்டி, தினேஷ், லாரிகுமார்,தினேஷ்பாபு,சத்தியமூர்த்தி, பி.கிஷோர்குமார், ராதாகிருஷ்ணன், டி.கஜலட்சுமி, பி.உஷாராணி, காந்தி, தினேஷ், ஆர்.செல்வி, இ.முருகன், ஆர்.சித்தநாதன், எம்.ராமு, ஏ.ஜெய்சன், எம்.ராஜசேகர், கே.மோகன், பி.மனோகர், விஜயராகவன், கப்பல் மணிவேல் பாலு ச.ம.அபினேஷ்வரன், பி.குணசேகரன், எம்.அசோக்குமார், எம்.முருகேசன், எஸ்.சிவா ,அஜித் எம்.விஜயகாந்த், வி.பாலாஜி, வி.கிர்த்திஷ், கங்காதரன், கோபிசரவணன், ஏ.பிரபு, ஏ.விஜயகுமார், எம்..ஜெயலட்சுமி, K.மகேஷ், T.பாலு, R. முனீஸ்வரன், R.விமல்குமார், ஏ.ஆறுமுகம், பி.ரமேஷ், வி.குழந்தைசாமிச.மகேஷ்எஸ். கருப்பையா எஸ்.குணசீலன் எஸ்.ராஜா எஸ்.நடராஜன் ஜி.அருண்பிரசாத் மற்றும்பலர் கலந்து கொள்கின்றனர்.

வட்டதுணைச் செயலாளர் சி.அமலதாஸ்நன்றிகூறுகிறார்.

ஜி.கே.இனியன் ஏற்பாட்டில் சென்னை வடகிழக்கு மாவட்ட தி.மு.க.

இளைஞரணி சார்பில் பள்ளி மாணவர்கள் - மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை!

மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ – எஸ்.ஜோயல் வழங்கினர்!

சென்னை, டிச. 8

தமிழ்நாடு துணை முதல்வர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.கே. இனியன் ஏற்பாட்டில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப்போட்டியில்வெற்றி பெற்றமாணவர்களுக்குபரிசு வழங்கும் நிகழ்ச்சியும், மாற்றுத் திறனாளி குழந்தைகளுக்கு பள்ளி சீருடை,பேக்,ஊக்கத்தொகை மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியும் வடகரைஅரசுஆதிதிராவிடர் பெண்கள்மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்றஉறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், சென்னை மண்டல பொறுப்பாளருமான தூத்துக்குடி எஸ்.ஜோயல் ஆகியோர் கலந்து கொண்டு பரிசுகளை வழங்கினர்.

சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆர்.டி. மதன்குமார், துணை அமைப்பாளர்கள் கேபிள் த.கணேசன், சி.எஸ்.எஸ். டி.சீனிவாசன், டி.ஜி.ஆர். மணிவண்ணன் ஆகியோர் வரவேற்புரையாற்றினர். புழல்ஒன்றியபொறுப்பாளர் சி.அற்புதராஜ் முன்னிலை வகித்தார்.

இதில்ஒன்றியநிர்வாகிகள் ஆர்.முருகன், நா.ஜெகதீசன், மு.ரமேஷ் மற்றும் புழல் ஒன்றிய பெருந்தலைவர் தங்கமணி திருமால், செங்குன்றம் பேரூராட்சி துணை தலைவர் ஆர்இஆர். விப்ரநாராயணன், அலமாதி ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்வாணன், திமுக கழக நிர்வாகிகள் சி.ஏழுமலை, மா.மணி, ஆர்.ஸ்டாலின், ஜெ.முருகன், கமலக்கண்ணன், முரளி, கபிலன், கல்விநாதன், கர்ணா, தனசேகர், அருணகிரி, வே.பாரதி, விமலநாதன், ஐயப்பன், மணிமாறன், பிரேம்குமார் உதயசூரியன், கஜபதி, சி.சுதாகர், செல்வகுமார், கார்த்திக், கோபி, விமல், ராஜேஷ், லெனின், முருகன், அஷ்வின், டில்லி ரமேஷ், தினேஷ், ராமச்சந்திரன், ஜனார்த்தனன், புள்ளிலைன் டில்லி, மோகன்,சிவசங்கர்,கராத்தே பிரகாஷ், மணிகண்டன், ரூபேஷ், குறலரசன், ஜோதி, ஜெயபால், நாகராஜ், ரகு, ராதா கிருஷ்ணன், அருண், ராபர்ட் உட்பட திமுக நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

புழல் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள்செ.யுவராஜ்,ஏ.டேவிட் ஆகியோர் நன்றி கூறினர்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாவட்ட துணை அமைப்பாளர் ஜி.கே. இனியன் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் மாநில அளவிலான கராத்தே போட்டியில் வெற்றி பெற்ற 600க்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பரிசு, கோப்பை, சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி சென்னை வடகிழக்கு மாவட்டச் செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம் தலைமையில் செங்குன்றம் புள்ளிலைன் எஸ்எஸ்ஆர் பேலஸில் நடைபெற்றது. புழல் ஒன்றிய பொறுப்பாளர் சி.அற்புதராஜ், சோழவரம் தெற்கு ஒன்றியச் செயலாளரும் சோழவரம் ஒன்றிய துணைப் பெருந்தலைவருமான மீ.வே. கர்ணாகரன், புள்ளிலைன் ஊராட்சி மன்றத் தலைவர் தமிழ்செல்வி ரமேஷ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திருவொற்றியூர் நகரக் கழக முன்னோடி

புல்லட் ஆ. தங்கராஜ் மறைவு!

கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, டிச.9-

திருவொற்றியூர் நகர கழக முன்னோடி, தமிழ் நாடு வணிகர் நல வாரிய முன்னாள் உறுப்பினர், காலடிப்பேட்டை வர்த்தகர் சங்க முன்னாள் தலைவர், வட்ட கழக முன்னாள் செயலாளர், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கலைஞர் அவர்களால் புல்லட் தங்கராஜ் என அன்போடு அழைக்கப்பட்ட தந்தை பெரியாரின் கொள்கை பிடிப்பாளர் ஐயா ஆ.தங்கராசு (வயது 94) அவர்கள் 08/12/2024 ஞாயிற்றுக்கிழமை அன்று

மதியம் 2.00 மணியளவில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்ததும் கழக நிர்வாகிகள், முன்னணியினர் ஏராளமானோர் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தினர்.

தாம்பரம் மேற்கு பகுதி 5 வது மண்டலம் 46 வது வட்ட கழகத்தின் சார்பில் தமிழக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாமன்ற உறுப்பினரும் மாநகர மகளிர் அணி அமைப்பாளருமான ரமணி ஆதிமூலம் அவர்கள் ஏற்பாட்டில் புதியதாக வைக்கப்பட்டுள்ள கழக கல்வெட்டை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர். ராஜா.எம்,எல்.ஏ திறந்து வைத்தார் மேலும் மாநகராட்சி துய்மை களபணியாளர்கள் மற்றும் பொது மக்கள் 200 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். உடன் தாம்பரம் மாநகராட்சி மேயர்.க.வசந்தகுமாரி. துணை மேயர். கோ.காமராஜ். மண்டல குழு தலைவர்கள்,பகுதி கழக செயலாளர் டி .காமராஜ்.எஸ் இந்திரன். பகுதி செயலாளர் செம்பாக்கம் இரா சுரேஷ், மாமன்ற உறுப்பினர்கள். கொடி தாமோதரன்.சசிகலா கார்த்திக், பகுதி கழக நிர்வாகிகள் வட்ட செயலாளர் சீ.செழியன், எஸ் சீனிவாச குமார். வா.லோகநாதன், ரமேஷ்பாபு, டி.வி.முருகன்,பகுதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்களும் பெரும் திரளாக பங்கேற்றனர்.